உ

குமரன்றுணை

தொண்டைமண்டலத்தைச்சேர்ந்த

திருமணம்

சுலோசனமுதலியாரவர்கள்

திருநெல்வேலி

சுவாமி வேணுவனநாதருக்கும்

ஸ்ரீ காந்திமதியம்மைக்கும்

நடப்பிவித்த

அஷ்டபந்தனச்சிறப்பையும்

சிந்துபூந்துறையிற்

பாலங்கட்டுவித்தசிறப்பையும்பற்றி

திருநெல்வேலியில்

முத்தமிழ்த்தலைமைப்புலமைநடாத்திய

அம்பலவாணன்கவிராஜாவர்கள்

குமாரர்

முத்துக்குமாரசுவாமிகவிராஜரவர்களால்

இயற்றிய

ஆசிரியவிருத்தங்கள்

கட்டளைக்கலித்துறைகள்.

ஷை சுலோசனமுதலியாரவர்கள்குமாரரும்

திருவனந்தபுரம்

ஐக்கோர்ட்டுப்பென்ஸன்ஜட்ஜியுமான

வேதாத்திரீசதாசமுதலியாரவர்கள்

விருப்பத்தின்படி

திருநெல்வேலி

முத்தமிழாகரஅச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டன,

உ

சிவமயம்.

சாற்றுக்கவிகள்.

இச்செய்யுட்கள்பாடிய
முத்துக்குமாரசுவாமி கவிராஜரவர்கள்
குமாரர்
கவிராஜ. நெல்லையப்பபிள்ளையவர்கள்
இயற்றிய

எழுசீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.

———0———

திருமணம்ராமலிங்கராஜேந்த்ரன்செய்தவப்பயனெனச்சிறந்தோன்
தருமனென்னெறிநின்றொழுகும்வேள்கவிஞர்தமக்கருள்கற்பகதாரு o
வருமதிவதனத்தையலோர்சிலையில்வரப்பதம் பெயர்த்திடுமகிபன் o
மருமலிகுவளைத்தார்கிடந்திலங்குமணியெழுவனையதோள்வள்ளல். ()

ஆலோசனக்குழலேனரிவையர்மோகனருள்பழுத்தொழுகரவிந்த o
விலோசனவேதாத்ரீசதாஸேந்த்ரவிவேகனைச்சேயெனப்பெற்று o
வலோசனங்களையேபுரப்பதிலுடையான்வண்மையோ மனங்கையிலு
டையான், சுலோசனனெனப்பே ருற்றவுத்தமனாந் தோன்றறன்பத்தி
மைதோன்ற. ... ... (௨)

வழுதிமுன்வேண்டவளர்மகாலிங்கவரதர்க்குந்திகழ்வடிவாட்கும் o
பழுதிலாதட்டபந்தனமுடன்கும்பாபிடேகமுமுயர்பனவர் o
தொழுதிசொல்விதியினியற்றியபரிசுஞ்சிந்துபூந்துறையினிற்பால o
மெழுதிவாகரனுமதியுமுள்ளளவுமிசைபெறவியற்றியவியல்பும், [௩]

நெல்லையம்பதிவாழ்பலவாணநிபுணனற்றவத்தினினேர்ந்தோன் o
மல்லையம்பதிபற்செற்றவெம்பெருமான்மலர்ப்பதங்கனவிலுமறவான்
சொல்லையம்பதியாமுத்துக்குமாரசுவாமிபாவேந்தெனுமெந்தை o
வல்லையம்பதிரம்பாமுண்டோன்புகழவருங்கவியால்வகுத்தனனே. ()

அக்கவியனைத்துமச்சினிலியற்றியவனியிலனைவரும்புகழத் ௧
தக்கவியனைத்துந்துமிமுழக்கிமையோர்தாமுமோர்திடப்புரிந்தனனால்
மிக்கவியனைத்துணையுங்கொடுமூட்டி மிடியெனச்சொலும்பெய ரொடு
மோ, திக்கவியனைத்துக்கவிக்கருள்வேதாத்ரீசதாஸேந்த்ரபூசிதனே.()

திருநெல்வேலி

கவிராஜ, சுந்தரமூர்த்தியாபிள்ளையவர்கள்

சுவிகாரபுத்திரர்

கவிராஜ, ஈசுரமூர்த்தியாபிள்ளையவர்கள்

இயற்றிய

அறுசீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.

—o—

இந்தரவச்சடைப்பரனைப்பணிந்தேத்துமிராமலிங்கவிறைவனீன்ற ௧
சுந்தரஞ்சேர்சுலோசனமன்மதரூபனெவும்விழித்துணையுமீர்ந்த ,,
தந்தரநேர்காந்திமதித்தாயினுக்குங்கழைவளநாதருக்குமுன்னாள் ,,
அந்தரவாணரும்புகழப்புரிந்தவஷ்டபந்தனத்தினருமைச்சீரும். ௧
நந்துவயிறுழைந்தீனறதண்டரளந்திகழ்பொருநைநதியிற்றுன்னுஞ் ,,
சிந்துபூந்துறையதனிற்பெரும்பாலம்புரிந்தவொருசீரும்பூவில் ,,
வந்தபிரமனைச்சிரசிற்குட்டியருஞ்சிறையிலிட்டவடிவேற்செங்கைக் ,,
கந்தவேள்பதம்பணியம்பலவாணக்கவிஞனருங்காதற்சேயாய், ,,
வந்துதித்தவெனதுபெருந்தந்தையெனுமுத்துக்குமாரசாமி ,,
செந்தமிழின்கவிகளினாலியற்றியாவரும்புகழச்செய்தானந்தச் ,,
சந்தமுறும்பாடல்களையச்சியற்றினான்கவிஞர்தம்பாலன்பு ,,
தந்தநம்வேததரீசதாசமகராஜனெனுந்தருணமாலே, ,,

சேற்றூர்ச்சமஸ்தானவித்வான்

முகவூர்க்

கந்தசுவாமிக்கவிராஜரவர்கள்

குமாரர்

மீனாட்சிசுந்தரக்கவிராஜரவர்கள்

இயற்றிய

கழிநெடிலாசிரியவிருத்தம்.

சீர்கொண்டநீர்வளைந்திடுபூவினுறும்மணக்
    கணமெலாமொன்றுகூடிக் ௧
கீதவுமத்தனுலுமங்கலமேமுழங்கிவரு
    கையினுலுமென்றுமேநீங ௨
காதுதிருமணமென்னுமூர்க்குமொருமணமெண்
    கமழ்கின்றராஜராஜன் ௩
கனகநாட்டும்புகழவருராமலிங்கசிங்
    கார்துரைபெற்றபாலன் ௪
கன்னியரைவில்லம்புகொள்ளாமலேமெய்க்
    கஞ்செய்யும்ரூபமதவேள் ௫
கவிராஜர்தங்களைப்புவிராஜராக்கியே
    காத்துவெகுகீர்த்திகொண்டோன் ௬
கன்விலுந்தருமமேசெய்திடக்கண்டுமகிழ்
    கன்னனெனவந்தமன்னன் ௭
காசினியெல்லாம்பணியுமதிகாரமேசெய்து
    கர்த்தனெனவுற்றசீலன் ௮
சீர்கொண்டகற்பினுக்கொருதெய்வமென்னச்
    சிறக்கும் வடிவம்மைகணவன் ௯
திகழும்வேததாத்ரீசதாசங்கராஜனைச்
    செல்வமகவாகவீன்றோன் ௰
திருக்கருணைதத்தளித்திடுநேத்திரானந்த
    செயசிங்கமென்றதுங்கன்

தேவர்களுமேபுகழ்சுலோசனவீராஜகுல
சேகரகுணாலதீரன் o
திருநெல்வேலிப்பதியின்மந்த்ரியதிகாரஞ்
செலுத்திவருநாளிலேதான் o
செழியன்முனம்வேண்டவளர்வுறுமகாலிங்கபர
சிவபிரானுக்குமன்பர் o
தீவினையகற்றுவடிவாம்பிகைதனக்குமகிழ்
சேரஷ்டபந்தனமுமே o
தெண்ணீரொனுங்கலைவனைந்துவருகின்றபூ
தேவியும்வியந்துபோற்ற- o
வார்கொண்டவட்டதிசைமுட்டுபுகழ்பெற்றிட
மகிழ்ந்துதான்செய்தசீரும் o
வளமேவுசிந்துபூந்துறையினிற்பொருனையென
வருகின்றமாநதிக்கு o
வருகன்கமாநெடுகணுறுபாலமுங்கட்டி
வைத்துநதிகணவணிகராய் o
மகிமையுறவேசெய்தசீருமெக்காலமும்
வளர்ந்திடும்நெல்லைநகரில் o
வண்டமிழ்க்கவிவாணர்தங்கள்குலதெய்வமென
வந்தவதரித்தகும்பன் o
வனைவுற்றதன்பேருரைத்தவருமேபாட
வாமுதவுகின்றவரதன் o
மலர்வாணிபெண்பாலெனக்கருதியன்னவளை
மாத்திரம்வெலாதசிங்கம் o
வளர்குணமெனக்கவியுமதுரரசமுற்றிடவும்
வருசித்தெனுயிருமான o
தார்கொண்டநெல்லையப்பேந்த்ரகவிராஜனைந்
தருவையுமளித்ததருமன் o
தண்டுறைசைமேவுசுப்பிரமணியதேசிகன்மு
தன்மையாக்கொண்டசீடன் o
தரணிபுகழ்முத்துக்குமாரசாமிக்குமுனை
சரசகவிராஜமேரு o

தண்ணமுதெனுங்கவியிலாக்கினான்க்கவிக்
டன்னையிந்நாளிலெழுதாத் ௦

தன்மையுறெழுத்திற்பதித்துவெகுபுத்தகஞ்
சாரவுமியற்றினனால் ௦

சகலதுரைமாருமகிழச்சுலோசனமுனி
றவத்திடையுதித்தசெல்வன் ௦

தந்தைதாயைத்தினமுமறவாதுதெய்வமாத்
தனதுமனம்வைத்தநல்லோன் ௦

சன்கமகராஜனெனவந்தவேதாத்ரீச
சதாசகெம்பீரன்மாதோ. ௦

சாற்றுக்கவிகள்

முற்றிற்று.

உ

சிவமயம்.

சுலோசனமுதலியாரவர்கள்பேரில்

ஆசிரியவிருத்தம்.

பூமேவுசதுமுகப்புத்தேளுநாகப்
        புரந்தரனும்வந்துநாளும்
    போற்றிசைக்குங்கழுக்குன்றத்தமர்ந்தருட்
        புராதனனைநாளுமறவாப்
    புண்ணியனிராமலிங்கேந்த்ரன்மிகுசெய்தவப்
        பொலிவினாலவதரித்தோன்
    புகழ்பெறுந்திருமணந்தழையவந்திடும்யோக
        பூபாலன்யாருமெச்சும்
மாமேவுகுவளையந்தார்மேவுமார்பினன்
        மதியகடுரிஞ்சுமாட
    மலிமங்கைநகர்வாழ்குபேரனணிசெறிநெல்லை
        வளநகரில்வழுதிவேண்ட
    வளர்மஹாலிங்கர்வடிவாட்கஷ்டபந்தனம்
        வரிசையினியற்றியெவரும்
    வாழ்த்திடச்சீர்த்திபெற்றிடும்யோகனிங்லாந்து
        மருந்துரைகள்தயைகள்பெற்றோன்
பாமேவுநாவலர்க்குதவுஞ்சுலோசனப்
        பைந்தாருவினியதாம்ப்ர
    பன்னிநதியிற்சிந்துபூந்துறையினீதிபுரி
        பண்பனுந்தாமஸ்னென்னும்
    பார்புரந்திடுமன்னராசாளுநாளஸ்தி
        பாரஞ்செய்வித்துமேன்மை
    பயிலுமான்குமரியென்றிடுமன்னராசன்
        பதத்தின்மேற்பணியியற்றித்
தேமேவுமருமலர்த்தாமமணிமன்னவர்
        சிகாமணியெனுந்தாமஸன்

செங்கோல்செலுத்துநாட்பாலமுழுவதும்வேலை
　　செய்வித்தோராயிரத்திற்
சேருமெண்ணூற்றுநாற்பத்துமூன்
　　றெனும்வருடதினமதினவம்பரேழிற்
செகமெலாம்புகழப்பிரதிட்டைசெய்வித்துமகிழ்
　　செய்தனன்செல்வமிகவே.

கட்டளைக்கலித்துறை.

ஆலங்கட்டிக்களந்தன்னிற்சிவனருங்கீர்த்திபெற்றான்
கூலங்கட்டிக்கடறன்னிலனுமனுங்கொண்டனன்சீர்
தாலங்கட்டிப்புகழ்பெற்றராசர்கள்தாம்ப்ரபன்னிப்
பாலங்கட்டிப்புகழ்பெற்றான்சுலோசனபாண்டியனே. (௧)

சப்பாணிகூன்குருடுக்குமனதிற்றளர்ச்சியின்றிக்
கப்பாருங்காலிரண்டொன்றிலுஞ்செல்லவிக்காசினியின்
மெய்ப்பாருந்தாம்பிரபன்னியிற்பாலம்விளங்கச்செய்தான்
ஒப்பாருமில்லென்சுலோசனதீரநல்லுத்தமனே. (௨)

ஓர்யாமந்தோணியும்வெள்ளமும்பார்த்துண்ணடுங்கியிரதக்
கார்காலமுஞ்சரற்காலமுமென்றுகழியுமென்றே
பார்தான்படுந்துயர்தீரச்சுலோசனபார்த்திபன்போ
லார்தானுளர்சிந்துபூந்துறைப்பாலமமைத்தவரே. (௩)

அழியுஞ்சரீரமழியாபுகழென்றகத்திலுன்னிச்
சுழியும்புனற்சிந்துபூந்துறைமாநதித்தோணியையும்
பழியுண்கச்செய்துபழியின்றிப்பாலம்படைத்தல்செய்தான்
வழிமன்னுசெல்வம்பெருகுஞ்சுலோசனமன்னவனே. (௪)

மன்னவனெங்களிராமலிங்கேந்திரன்மாதவத்தின்
றன்னரும்பேறெனவந்தசுலோசனன்றாரணியிற்
பின்னருமுன்னருந்தற்கிணைதானெனப்பேசவளம்
பன்னருந்தாம்பிரபன்னியிற்பாலம்படைத்தனனே. (௫

படைத்தான்புனற்சிந்துபூந்துறைமாநதிப்பாலந்தனைக்
கிடைத்தானளவற்றசெல்வத்தைக்கீர்த்தியைக்கேதமெல்லாந்
துடைத்தானுலகுக்கிராமலிங்கேந்த்ரசுகுணன்பெற்ற
நடைத்தாமவேனென்றுரைக்குஞ்சுலோசனநாயகனே. (௬

நாயகனெங்கள்வடிவாளுக்காழிநள்ளார்புவிக்குத்
தாயகனானசுலோசனதீரனந்தம்பரபன்னிப்
பாயகன்மாநதியிற்சிந்துபூந்துறைப்பாலஞ்செய்தே
வாயகன்கொள்ளாப்புகழையெந்நாளுமருவினனே. (எ)

பொருளையெனச்சொலுமாதுதனக்கொருபூண்விரும்பிக்
கருணைபொழிபுஞ்சுலோசனதீரனைக்காணவவன்
திருநெல்லையம்பதியிற்சிந்துபூந்துறைசேர்மருவ
வருமைதரும்பணியாம்பாலந்தன்னையருளினனே. (அ)

சிவபுண்ணியம்பசுபுண்ணியமென்றுரைசெய்வரது
தவமுன்புசெய்தவர்க்கேபொருந்துமென்பரத்தன்மைபெற்றான்
புவனந்தனில்வருகின்றசுலோசனபூபனெழில்
நவமனுதாம்பிரபன்னியிற்பாலத்தைநாட்டிவைத்தே. (கூ

வைத்தான்புவியிற்புகழ்சிந்துபூந்துறைமாநதியில்
வித்தாரமானநற்பாலத்தைக்கட்டிமிளிர்குவளைத்
தொத்தார்புயத்தன்சுலோசனதீரசுகுணனெழின்
முத்தாரகலவடிவாண்மணாளமுகுந்தனே. (ய)

பாரார்புகழும்புனற்சிந்துபூந்துறைப்பாலஞ்செய்தே
சீராருஞ்செல்வம்பெருகுஞ்சுலோசனதீரனுக்கு
நேராருமில்லையென்றேபுகழ்த்தம்பநிறுத்திவைத்தார்
கூரார்மதியிற்சிலாந்துறைமன்னர்குறிப்புவைத்தே. (யக)

எண்சீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்

தொண்டைமண்டலமெனும் பார்மகட்குக்கஞ்சத் தூயமுகந்திருமண மாந்தொல்பதிக்கட், பண்டைவருஞ்சென்னமதில்ராமலிங்கப்பார்த்தி பன்றன்றவப்பேறேவடிவமாகி, விண்டைவருங்கொடிதவழும் வீதிநெ ல்லையின்சிந்துபூந்துறையில்வித்தாரபாலம், தண்டையலர் புகழ் வேதாத்ரீசதாசன்றனைமகவாய்ப்பெற்றசுலோசனபூமானே. (யஉ)

கட்டளைக்கலித்துறை,

தந்திமுகவநின்றாட்டாமலாயைநித்தந்துதித்து
வந்தனைசெய்யும்வேதாத்ரீசதாசவர்ாதயற்குக்
கந்திவனஞ்செறிவஞ்சியைக்கோர்ட்டேட்கலந்தசட்ஜாம்
புந்திமகிழநிகாருமுஞ்செயும்புரிந்தருளே. (யஙு

திருநெல்வேலிச்
சுவாமி கழைவனநாதருக்கும்
ஸ்ரீ காந்திமதிநாயகிக்கும்
இலக்கதீபஞ்செய்வித்ததற்கியற்றிய
அறுசீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.

இலக்கதீபங்களிசேர்மலையமான்றிகழ்வளைக்கையெம்மான்பள்ளி
சலக்கணேபுரிபகவற்கியற்றியங்ஙன்கீர்த்திபெற்றான்றவத்தாலிந்த
நிலக்கணேவருசுலோசனமதிபனமனைவடிவாள்நேயமைந்த
னாலக்கமாய்த்தொகைத்தீபங்கழைநாயகர்க்கியற்றச்சொலித்தமாதோ

கட்டளைக்கலித்துறை

இலக்கமெனுஞ்சுடரேற்றிக்கழைவனத்தெந்தைக்கின்றிந்
நிலக்கணுறுந்துயர்நீங்கிப்புகழ்செல்வநீடிப்பின்னர்ச்
சொலற்கருமின்பமுமெய்தினன்றொல்புகழன்னையொடு
நலக்கணுறும்வேதாத்திரீசதாசநகுலனின்றே.

போரிலச்சண்முகன்சூருரங்கீண்டற்பொரப்பொரும்வேள்
பாரிலச்சந்தவிர்வேதாத்திரீசதாசப்பருதி
நீரிலச்சந்திரன்றேயவணிநெல்லைநேயற்கின்றே
யோரிலச்சம்விளக்கேற்றியுயர்பவிசுற்றனனே.

மந்தித்தோப்பு
பாஷியம் சுவாமிகளென்ற நமசிவாயபாரதிகள்
இயற்றிய
ஆசிரியவிருத்தம்.

சீர்மேவுசாலிவாகனசகாத்தந்தனிற்
செல்லுமோராயிரத்திற்
சேர்ந்தவெழுநூற்றைம்பத்துநாலிற்கலி
திகழ்ந்தநாலாயிரத்துச்
செறிவானதொள்ளாயிரத்துமுப்பான்மூன்று

சென்றிடும்வருடமதனிற்
செம்பொனிமைவரைமுதற்குமரிவரையானபல
தேசமெல்லாம்புரக்குஞ்
ஜெகராஜனுங்கெங்கு வில்யங்ஙன் காவதாஞ்
செங்கோல்செலுத்துநாளிற்
திறல்ராஜவில்லியம்பெண்டிக்கெனுங்கெவுனர்
சென்னலிச்சிந்ததேசச்
ஜெயசக்கிரவர்த்தியா சற் பிரடிநதிக்காடஞு
சென்னைபுரியிற்கெவுனராய்ச்
ஜெகநாததெக்கணப்பிரதேசம்வஞ்சிவரை
சீமையரசாக்ஷிசெய்யத்
திருமலிநெல்வேலியின் மகாராஜராஜ
ஸ்ரீஜான்பிளாகப்பரனித்
தென்பாண்டிமணி மகுடவேந்தனெனநீதிமுறை
செய்கலெக்கட்டராகத்
தீரனும் ஏ. பி. மில்லர் சப்கலெக்கட்டர்
ஜான் பிளப்பு ஜான் பிச்செலாஞ்
செல்வர் ஏட்ஜிஸ்ட்டாண் டஜிஸ்ட்டாண்டதாகச்
சிறந்த ஜான் ஸ்காட்டுசியாயஞ்
செப்புகோரட்டாதிபதிய யிடக்ர்னல்
சிமித்துதலைகர்த்தனாகத்
தெய்வமறையுணர்ராமசுவாமிபூசுரபதி
திவானதிபனுய்ப்புரக்கச்
செப்புவிப்பிரதிலககோவிந்தராவுஞ்
சிரஸ்தாதிபத்யஞ்செயத்
திங்கண்மும்மாரிபெய்துலகெலாமின்பஞ்
செழித்துவளர்கின்றநாளில்
வார்மருவுகும்பப்பயோதரப்பொற்கொடிதன
வயிறுடைமுடிகடோறும்
வண்டுகிற்கொடியாடவிண்முகட்ளக்கவெழு
மணிமாடநிரைகண்மலியும்

வண்மைபெருநெல்லையம்பதிமேவுசச்சிதா
னந்தமயமூலநாதன் 0
வழுதியர்பிரானவேண்டவளர்மகாலிங்கநிறை
மதிமுகக்காந்திமதியார் 0
மருவட்டபந்தனச்சீரணோத்தாரணம்
வளர்சிவாகமவழித்தாய் 0
மன்னுவித்துலகெலாம்வாழ்விக்கவுன்னிமதி
வல்லராயெம்பிரான்பொன் 0
மலரடிக்கன்பராஞ்செல்வரொடுசூழ்ந்தபூ
மண்டலச்செல்வமெல்லாம் 0
வயின்வயினெருங்கமலர்மாதுகூத்தாடுபெரு
வாழ்வுபெறுசென்னையாளும் 0
மன்னர்மன்னவனானகெவுனருக்கறிவித்து
வளர்விதிக்குவைகள்பெற்றே 0
வாசமிகுமஞ்சள்சந்தனமேலமிலவங்க
மருவுமானமதகாநதம் 0
வளரகிற்கொட்டமுதல்வாசவகையபிடேக
வகைதயிலநறுநெயான்பால் 0
மதியைப்பிதிர்த்துவைத்தாலென்னதயிர்கன்னல்
வாரியிளநீரினவாரி 0
வரையுறுசெழுந்தேறல்வாரிமுப்பழமலைகள்
மற்றையகனிக்குவையொடு 0
மலைநாணவாருதிகநிறைநாணவீட்டிமணி
மண்டபந்தொறுநிறைதரே 0
மந்திரசிவாக்கினிநிருத்தமுடியாகோப
கரணமும்வகுத்தமைத்து 0
மறைவலோசைவாதுலருண்டுளங்களி
தழும்பவாய்வாழ்த்தெடுப்பக் 0
கார்மருவுசெங்கைக்குமாரெட்டபூபனருள்
கனயோகராஜராஜன் 0
கற்றகவிவாணர்நிதியுற்றவறிவோர்கண்மணி
காசினிபராவுமிசைக் 0

கர்த்தனாகியவெங்கடேசுரெட்டேந்த்ர முகில்
கமழ்முல்லைமுகையின்மிக்காங் o
கவினார்ந்ததண்டுலக்கிரியும் ஆடகவரை
க்தீர்த்தவாடகப்பொருப்புங் o
கமழ்நறுநெய்வெள்ளமும்பலகறிக்கூட்டமுங்
கனிவர்க்கமுதலபலவுங் o
கடன்மடைதிறந்தென்னவீசியோராயிரக்
காலின்மண்டபநிறைப்பக் o
கருணைநிதியாமன்பர்வேண்டநீண்டவனருள்
கனிந்தசின்மயவிமானங் o
கதிர்விடுபொனத்தமண்டபமகாமண்டபங்
காலாறுகொளுமண்டபங் o
காட்சிதருநிர்த்தமணிமண்டபந்துவசமண்
டபநூறுகான்மண்டபங் o
கண்ணகன்றெழுதிருமதிற்கோபுரங்களுங்
கவினப்புதுக்கிமறையோர் o
களிதழும்பிட்வங்குராற்பணந்தொட்டுவை
கலுமன்னதானநல்கிக் o
கண்டசுபலெக்கனத்திற்கணேசன்முதற்
கந்தர்பரிவாரதெய்வக் o
கணநாதருக்கும்விதியாயஷ்டபந்தனங்
கனககும்பாபிடேகங் o
காதலொடுசெய்துபொன்மேருவெனவான்முகடு
கதுவுபொற்றுவசநாட்டிக் o
கணபதிப்பிராத்தனைசெய்திசமானவருணமொழி
கற்றவாசிரியவர்ணங் o
கலசநற்புண்ணியாவாசனமனுக்கைசங்
கற்பமுதலானகிரியை o
தார்மருமுந்நூன்மார்பர்சைவமறைவேதியர்க
டவருதுசெய்யவின்பச் o
சந்தைமறையோதையெழுகடல்வாயடைப்பநற்
சைவமந்திரமொலிப்பச் o

சாநித்தியபூசைசங்கோசம்வரலாற்மகத்
　　தனியாகசாலார்ச்சனை ௦
தந்திரவிதிப்படிநடத்திடச்சீரேணைத்
　　தாரணைநின்மால்யசுத்தி ௦
தனிரத்னநியாசம்யந்திரதாபனமஷ்ட
　　பந்தனந்தான்செய்வித்துச் ௦
சங்கவொலிபேரியொலிதானவொலிபல்லியந்
　　தாக்குமொலியண்டமுட்டச் ௦
சாற்றுநந்தனவருடமகரமதிபதினேழ
　　தாந்தெய்திதலைநாட்டனிற் ௦
தநுசுலெக்கனசுபமுகூர்த்தத்தில்வேண்டவளர்
　　தாணுநனமூலநாதர் ௦
தருசருணைவடிவானகாந்திமதியார்க்குந்
　　தழைத்தகும்பாபிடேகஞ் ௦
சால்புறுமகாபிடேகமும்இயற்றிச்சரா
　　சரமெலாமுய்ந்துவாழ்கத் ௦
தந்தவுற்சவமும்புரிந்துவிண்ணோர்க்குமரி
　　தானநற்கீர்த்திபெற்றுன் ௦
தருகன்னைகுலதிலகத்தொண்டைமண்டலபூப
　　சாம்பராச்சியபாக்கியயோக்கிய ௦
சன்மார்க்கஞானதிருமணராமலிங்கவுத்
　　தமன்புரிதவப்பேறதாய்ச் ௦
சற்புத்ரமணியாயுதித்தருட்சியதன்ம
　　சற்குணநன்மேருவாகித் ௦
தரணிமண்டலராஜராஜதுரைமார்கள்சிந்
　　தனைமகிழ்ந்திடுகண்மணியாய்த் ௦
தானோங்கிநல்லருட்சீரோங்கிவளர்சுலோ
　　சனஞானபுருடமணியே. ௦

முற்றிற்று.